2014 ஆகஸ்ட் 8]

382—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

***5300—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, அ. வல்லாளபட்டி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். மதுரை மாவட்டத்தில் மேலூர் தொகுதி, அ. வல்லாளபட்டி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் முன்னுரிமையின் அடிப்படையில் அப்பேரூராட்சிக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அ. வல்லாளபட்டி பேரூராட்சியில் 15 வார்டுகள் இருக்கின்றன. அதில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் ஆய்வு செய்யப்பட்டிருப்பதாகவும், கூடிய விரைவில் முன்னுரிமை அடிப்படையில் அ. வல்லாளபட்டி*

பேரூராட்சிக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்துத் தரப்படும் எனவும் அறிவித்திருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.*

திரு. சி.எச். சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள கும்மிடிப்பூண்டிப் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமைப்பதற்கு ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ள நிலையில் இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா எனத் தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மூன்றாண்டு கால ஆட்சியில் மட்டும் 69 பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, இன்றைக்கு அவை செயலாக்கத்தில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில், சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க இடம் கிடைக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கழிவுநீர் கசடு அகற்றும் திட்டம் என்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்தியிருக்கின்றார்கள். அவசியம் ஏற்படின் கண்டிப்பாக இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 383, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*